# போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ் மொழி பாடத் தாள் கட்டாயம்

minnal kalviseithi

## தேர்ச்சி முறைகள் குறித்து விரிவான உத்தரவு வெளியீடு

**சென்னை, டிச. 3:** போட்டித் தேர்வுகள் அனைத்திலும் தமிழ் மொழி பாடத் தாள் கட்டாயம் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மனிதவள மேலாண்மைத் துறை செயலாளர் மைதிலி ராஜேந்திரன் வெளியிட்டுள்ள உத்தரவு விவரம்:

தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களே 100 சதவீதம் நியமனம் செய்வதற்கு அரசு உறுதிபூண்டுள்ளதாக சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதற்காக போட்டித் தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத் தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்படும் என பேரவையில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார்.

இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் சார்பில் அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதன்படி, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுகளில் தமிழ்மொழித் தேர்வு கட்டாயமாக்கப்படுகிறது.

**எந்தெந்த தேர்வுகள்?:** அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயமாகத் தமிழ் மொழித் தேர்வு நடத்தப்படும். தமிழ் மொழித் தகுதித் தேர்வுக்கான பாடத் திட்டம் பத்தாம் வகுப்புத் தரத்தில் நிர்ணயம் செய்யப்படும். தமிழ் மொழித் தாளில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி கட்டாயம். தகுதித் தாளில் தேர்ச்சி பெறாதவர்களின் இதர போட்டித் தேர்வுத் தாள்கள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

**குரூப் 1, 2 மற்றும் 2ஏ தேர்வுகள்:** அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப் 1, குரூப் 2 மற்றும் 2ஏ தேர்வுகள் முதனிலை மற்றும் முதன்மை எழுத்துத் தேர்வு என இரண்டு நிலைகளைக் கொண்டது. இந்த போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழி தகுதித் தேர்வானது முதன்மைத் தேர்வுடன் விரித்து எழுதும் வகையில் நடத்தப்படும். முதன்மை எழுத்துத் தேர்வானது, மொழிபெயர்த்தல், சுருக்கி வரைதல், பொருள் உணர்திறன், சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல், கடிதம்-கட்டுரை வரைதல் உள்ளிட்ட தலைப்புகள் கொண்டதாக நடத்தப்படும். இந்தத் தேர்வு 100 மதிப்பெண்கள் கொண்டதாக இருக்கும்.

தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் பெற்றால் மட்டுமே முதன்மை எழுத்துத் தேர்வின் இதர போட்டித் தேர்வுத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**குரூப் 3 மற்றும் குரூப் 4 தேர்வு:** குரூப் 3 மற்றும் குரூப் 4 தேர்வுகளில் பொதுத் தமிழ் அல்லது பொது ஆங்கிலம் உள்ளன. அதில் பொது ஆங்கிலத்தாள் நீக்கப்பட்டு, பொது தமிழ்மொழித் தாள் மட்டுமே மதிப்பீட்டுத் தேர்வாக அமைக்கப்படும்.

ஒரு நிலை மட்டுமே கொண்ட தேர்வுகளில் தமிழ்மொழித் தாளானது தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வாக நடத்தப்படும். இதிலுள்ள பொது ஆங்கிலத்தாள் நீக்கப்படும். 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி பெற்றால் மட்டுமே இதர பகுதிகளுக்கான வினாக்கள் மதிப்பீடு செய்யப்படும்.

**பிற வாரியத் தேர்வுகள்:** ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், வனத்துறை சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட இதர தெரிவு முகமைகளைப் பொருத்தவரையில், கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வினை நடத்துவது குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளால் வெளியிடப்படும்.